<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No.** 48/2020 **Date:** 02.12.2023

**PW**1-தங்கவேல்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் அக்கா மாமனார் பெயர் எனக்கு தெரியாது. சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம், சின்னமணலி கிராமம், ஒட்டத்தெரு, க.எண்.25 ல் வசிக்கும் காளியப்பன் மகன் சிதம்பரம் யார் என்றால் எனக்கு தெரியாது. சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம், சின்னமணலி கிராமம், ஒட்டத்தெருவில் வசிக்கும் சிதம்பரம் மகன் செந்தில்குமார் யார் என்றால் எனக்கு தெரியாது. ஆலச்சம்பாளையம், காளிகவுண்டன் கொட்டாய் ராமலிங்கம் மகன் தங்கவேல் என்பவர் நான் தான் என்றால் சரிதான். கடந்த 14.06.2013 ம் தேதி செந்தில் குமாரும், அருணாசலம் வகையாறாவும் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் நான் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்துவிட்டு அதை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஜக்குபந்தி விவரம் பற்றி எனக்கு தெரியும். கிழக்கில் பெரியஏரியும், மேற்கில் மாணிக்கம் நிலமும், தெற்கில் அருணாசலம், கந்தசாமி நிலமும், வடக்கில் செந்தில்குமார் நிலமும் உள்ளது. மேற்படி செந்தில்குமார் என் அக்கா மகன் என்றால் சரிதான். சசிகுமார் என்பவர் என் மருமகன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் தற்போது உள்ள உரிமைக்கு மட்டும் எழுதப்பட்டுள்ளதா அல்லது எதிர்காலத்தில் வந்து சேரும் உரிமைக்காகவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் 1.62 செண்ட் நிலத்திற்கு மட்டும் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் என்னுடைய கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ.1 க்கான முத்திரை தாள் எந்த தேதியில், யாரால் எந்த விற்பனையாளரிடம் வாங்கப்பட்டது என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பு எடப்பாடியில் நான் தான் வாங்கினேன். முத்திரை தாள் விற்பனையாளர் பெயர் செந்தில். எத்தனை முத்திரை தாள் வாங்கப்பட்டது என்று நினைவு இல்லை. 23.07.2008 ல் என்னிடம் எவ்வளவு தொகை கைவசம் இருந்தது என்றால் ரூ.6 லட்சத்து 50 ஆயிரம் இருந்தது. நான் வருமான வரி அட்டை வாங்கவில்லை. வா.சா.ஆ.1 ற்கான முத்திரை தாள் வாங்கி எத்தனை மணி நேரத்தில் பத்திரம் எழுதப்பட்டது என்றால் அது நினைவு இல்லை. முத்திரை தாள் வாங்கும் போது நான் முத்திரை தாள் விற்பனையாளரிடம் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. நான் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்து வாங்கும் போது கையொப்பம் செய்துள்ளேன். எதிர்காலத்தில் பாதை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று வா.சா.ஆ.1 ல் வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. என் மருமகனின் அண்ணன் பெயர் தான் செந்தில் குமார்.

அவரது காட்டை ஓட்டி தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு நான் தாவா சொத்துக்கு வில்லங்கம் வாங்கி பார்க்கவில்லை. சொத்து வாங்கும் போது வில்லங்கம் வாங்கி பார்க்க வேண்டும் என்றால் சரிதான். நான் சிதம்பரம் என்பவருக்காக வா.சா.ஆ.1 உருவாக்கப்பட்டதால் தான் நான் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1யை எழுதியவர் பெயர் செந்தில். வா.சா.ஆ.1 ல் வரைவு மற்றும் சான்று செய்தவர் என்ற இடத்தில் ஜெகநாததுரை என்பவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என் அக்கா கணவர் சிதம்பரம் என்பவருக்கு கையாளாக இருந்து வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்ததால் தான் எனக்கு அந்த விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் 1 வது பக்கத்தில் 3, 4 வது வரியில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் கிரையம் பேசுவதற்கு இடைதரகர்கள் யாரும் இல்லை. பிரதிவாதிகள் நிலத்தை விற்பனை செய்வதாக 5வருடத்திற்கு முன்பு என்னிடம் சொன்னார்கள். பிரதிவாதிகள் ஆதிதிராவிடர் சமூகம் என்றால் சரிதான். நான் வன்னியர் சமூகம் என்றால் சரிதான். தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து அக்கிரமம் செய்வதாக என் மீதும், சிதம்பரம் வகையறா மீதும் பிரதிவாதிகள் சங்ககிரி காவல் நிலையத்தில் 25.02.2023ல் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த மனு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வழக்கறிஞர் ஒருவருடன் ஆஜர் ஆன விவரம் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நிலத்தை அபகரிக்க முயன்றால் வழக்கு போடப்படும் என்று காவல் துறை எச்சரிக்கை செய்ததால் நாங்கள் பின் வாங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தேதியில் பிரதிவாதிகள் எனக்கு ஒப்பந்தம் எழுதிகொடுக்கவில்லை என்றாலும், முன் பணம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவாவில் எத்தனை பரிகாரம் கேட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-தங்கவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.